# அதுவே உடன்படிக்கை

# தொழுகை சம்மந்தப்பட்ட முக்கிய மார்க்கத்தீர்ப்புகள்

## முதற் கேள்வி: தந்தை வழிமூலமான எனது பெரிய சதோதரர் தொழுகையை நிறைவேற்றுவது கிடையாது. எனவே நான் அவரை சேர்ந்து நடக்க முடியுமா முடியாதா?

**பதில்:** தொழுகை இஸ்லாத்தின் ஒரு கடமை என்பதை ஏற்ற நிலையில் யார் வேண்டுமென்றே அதை நிறைவேற்றாமல் விட்டு விடுகின்றாரோ அவர் (காபிர்) இஸ்லாத்தை மறுத்தவர் என்பதே மார்க்க அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகும். இதற்கு மேலாக தொழுகை இஸ்லாத்தின் ஒரு கடமையென்பதையே மறுத்து விடுவாராயின் அவர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறுவார் என்பதே அனைத்து மார்க்க அறிஞர்களின் சரியான முடிவாகும்.

இதற்கு ஆதாரமாக, நபி (ஸல்) கூறினார்கள்: (மார்க்கத்தின் தலை இஸ்லாமாகும். அதனுடைய தூண் தொழுகை, அதனுடைய சிகரம் (உச்ச நிலை) இறைவனுடைய பாதையில் புனிதப் போர் செய்வது) ( ஆதாரம் அஹ்மத், திர்மிதி, இப்னுமாஜா).

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (ஒரு மனிதனை இறை மறுப்பு (குப்ர்) இறைவனுக்கு இணைவைத்தல் (ஷிர்க்) போன்றவற்றிலிருந்து பிரித்துக் காட்டுவது தொழுகையே)

(ஆதாரம் முஸ்லிம்)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (நம்மவர்களுக்கும் அவர்களுக்கும் இடையே பிரிக்கும் ஓர் ஒப்பந்தம் தொழுகையே ஆகும். எனவே தொழுகையை விட்டவர் நிராகரித்தவராவார்) ஆதாரம்: அஹ்மத்

தொழுகை இஸ்லாத்தின் ஒரு கடமையென்பதை மறுக்கக்கூடியவன் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் மொத்த இஸ்லாமிய சமூகத்தையும், ஈமானையும் பொய்ப்பிக்கக் கூடியவனாவான். இவனுடைய (குப்ர்) மறுக்கும் தன்மை தொழுகையை பொடுபோக்காக நிறைவேற்றாமல் விட்டவனுடைய (குப்ர்) மறுப்புத் தன்மையை விடவும் பாரதூரமானதாகும்.

எவ்வாறு இருப்பினும் இவ்விரு நிலைக்குட்பட்டவர்களையும் இஸ்லாமிய ஆட்சித் தலைவர் நீதி மன்றத்தின் முன் நிறுத்தி தொழுகையை விட்டதற்காக தவ்பா (பாவமன்னிப்பு) கேற்கும் படி பணிப்பார். தவ்பா செய்து மீண்டால் விடுவிக்கப்படுவார். இல்லையேல் மேற் குறிப்பிட்ட ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு (இஸ்லாத்தில் இருந்து வெளியேறியவராக கருதப்பட்டு) கொலை செய்யப்படுவார்.

மேலும் ஏனையோர்கள் மீது தொழுகையை நிறை வேற்றாமல் விட்டு விட்டவர்களை விட்டும் ஒதுங்கியிருத்தல், அவரை துண்டித்து விடல், அவர் இச் செயலுக்காக அல்லாஹ்விடம் தவ்பா செய்யாதவரை அவருடைய எந்த சுக துக்கங்களிலும் களந்துகொள்ளாதிருத்தல். இதோடு சேர்த்து அவருக்கு தொழுகை பற்றி நல்லுபதேசம் செய்தல் உண்மையின் பக்கம் அழைத்தல், மேலும் அதனுடன் தொடர்புடைய இம்மை மறுமையில் அனுபவிக்கவிருக்கும் தண்டனைகளைக் கூறி எச்சரித்தல் கடமையாகும். இதன் மூலம் அவர் திருந்தி தம் குற்றத்தை உணர்ந்து தவ்பா செய்தால், அல்லாஹ்வும் அவனுடைய தவ்பாவை ஏற்று மன்னிக்கப் போதுமானவன்.

(மதிப்பிற்குரிய பேரறிஞர் அப்துல் அஸீஸ் பின் பாஸ் அவர்களின் தீர்ப்பு நூல் பக்கம் 145)

இத்தீர்ப்பு: தொழுகையை விட்டவர் அதை நிறைவேற்றாமல் விட்டால் அதன் மூலம் என்ன நிலைகளை சந்திப்பார் என்பது பற்றிய சட்டங்களாகும்.

## கேள்வி: ஒருவர் தனது குடும்பத்தினர்களை தொழும்படி ஏவுகிறார். ஆனால் அவர்களோ இவரின் கட்டளைகளை செவிமடுப்பதில்லை. இந்நிலையில் இவர் வீட்டை விட்டு வெளியேறி விடுவதா?

**பதில்:** அக் குடும்பத்தினர் அறவே தொழாதவர்களாக இருந்தால் நிச்சயமாக அவர்கள் காபிர்களாவார்கள், இன்னும் மதம்மாறியவர்களாவார்கள், இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவர்களாவார்கள். இவர் அவர்களோடு சேர்ந்து வசிப்பது கூடாது. இருப்பினும் தொடர்ந்து இடை விடாமல் அவர்களை தொழுகையின் பக்கம் அழைத்துக் கொண்டிருப்பது இவர் மீது கடமையாகும். அல்லாஹ் அவர்களை சில நேரம் நேர்வழிப் படுத்தக்கூடும். ஏனெனில் குர்ஆன், ஹதீஸ், சஹாபாக்களின் கருத்து, சரியான புத்திரீதியான கண்னோட்டத்தின் அடிப்படையில் தொழுகையை விட்டவர் காபிராகிவிடுகிறார். அல்லாஹ் காப்பாற்றுவானாக.
இணை வைக்கக் கூடிய (முஷ்ரிகீன்கள்) பற்றி குறிப்பீடும் போது (அவர்கள் தவ்பாச் செய்து. பின்பு தொழுகையை நிறை வேற்றி. பின்பு ஸகாத்தும் கொடுத்து வருவார்களாயின் அவர்கள் உங்கள் இஸ்லாமிய சகோதரர்களாவார்கள். மேலும் (நம்முடைய) வசனங்களை அறிந்து கொள்ளக் கூடிய கூட்டத்தினருக்கு தெளிவு படுத்துகிறோம்). (அத்தவ்பா 11)

இவ்வசனத்திலிருந்து விளங்குவது யாதெனில் இவ்விடயங்களை அவர்கள் செய்யவில்லை என்றால் அவர்கள் எங்களின் சகோதரர்கள் இல்லை என்பதே! இஸ்லாமிய சதோதரத்துவம் பாவங்கள் அது எப்படிப்பட்டவைகளாக இருந்த போதிலும் விட்டுப் போவதில்லை எனினும் இஸ்லாத்தை விட்டும் வெளியேரிடும் போது விட்டுப் போய்விடும்.

**ஹதீஸின் அடிப்படையில் நாம் நோக்குவதாயின்** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ஒரு மனிதனை இணை வைப்பு, (ஷிர்க்) இறை நிராகரிப்பு (குப்ர்) போன்ற வற்றிலிருந்து பிரித்து, வேறுபடுத்திக் காட்டுவது தொழுகையாகும்)

ஆதாரம் முஸ்லிம்

மேலும் புறைதா (ரழி) அவர்கள் அறிவிக்கக் கூடிய ஹதீஸிலே நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (நம்மவர்களுக்கும் அவர்களுக்கும் இடையே பிரிக்கும் ஓர் ஒப்பந்தம் தொழுகையே ஆகும். எனவே தொழுகையை விட்டவர் நிராகரித்தவராவார்).

### நபி (ஸல்) அவர்களின் தோழர்களின் சொற்களிலிருந்து நோக்குவதாயின்:

அமீறுல் மு.:.மினீன் உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்: (எவர் தொழுகையை விட்டாரோ இஸ்லாத்தில் அவருக்கு எந்தப் பங்கும் கிடையாது.
அப்துல்லாஹ் இப்னு ஷகீக் என்ற தாபியீ கூறுகிறார்: நபி (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள் தொழுகையை நிறைவேற்றாமல் விடுவதைத் தவிரவுள்ள வேறு எந்த செயள்களையுமே (குப்ராக) இறைமறுப்பாக கருதவில்லை.

## புத்திரீதியான கண்ணோட்டத்தில் நோக்குவதாயின்:

ஒரு மனிதனுடைய உள்ளத்திலே கடுகளவுதான் ஈமான் இருந்தாலும் கூட அதன் மூலம் தொழுகையின் மகத்துவத்தையும் மேலும் அல்லாஹ் அதற்கு கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்வான். இதன் பின்னரும் அதனை நிறைவேற்றாமல் விட்டு விடுவானா? இது அவனால் முடியாத ஒன்று.
யார் தொழுகையை விடுவது (குப்ர்) இறை மறுப்பில்லை, என்ற கூற்றுக்கு சான்றாக முன்வைத்த ஆதாரங்களை உற்று நோக்குவாராயின் அவ்வாதாரங்களை ஐந்து விடயத்திற்கு அப்பாற் போகாமல் கண்டு கொள்வார்.
1 – ஒன்று அக்கூற்று அடிப்படையிலேயே எந்த ஆதாரமுடையதாகவும் இருக்காது.

2 – அல்லது அவ்வாதாரங்கள் ஒரு விடயத்தை, அல்லது ஒரு நிலைமையை குறித்து சொல்லப்பட்டிருக்குமே தவிர பொதுவாகவே தொழுகையை விட்டவன் காபிரில்லையென்று சொல்லப்பட்டிருக்காது.

3 – அல்லது அவ்வாதாரங்கள் ஒரு நிலமையை சுட்டிக் காட்டப்பட்டு அந்நிலைமையில் தொழுகையை விடுபடுவது (குப்ர்) இறை மறுப்பு இல்லையென சொல்லப்பட்டிருக்கும்.

4 – அல்லது அவ்வாதாரங்கள் பொதுவாக சொல்லப்பட்டிருக்கும் தொழுகை சம்பந்தமாக வந்த ஹதீஸ்கள் (தொழுகையை விட்டு விடுவது) குப்ர் என்று குறிப்பாக்கியிருக்கும்.

5 – அல்லது அவ்வாதாரங்கள் பலயீனமானவையாக இருக்கும். அவைகளைக் கொண்டு ஆதாரம் எடுக்கப்பட மாட்டாது.
தொழுகையை நிறைவேற்றாமல் விடுபவன் காபிர் என்பது தெளிவாகி விட்டால் அவன் மீது (முர்தத்) மதம் மாறியவனுக்கு என்ன சட்டமோ அது விதியாகி விடுகிறது.
மாறாக குர்ஆனிலோ, ஹதீஸிலோ தொழுகையை விட்டவன் முஃமின் என்றோ அல்லது சுவர்க்கம் நுழைவான் என்றோ அல்லது நரகத்திலிருந்து தப்பி விடுவான் என்றோ கூறப்படவில்லை. குப்ர் என்ற வார்த்தைக்கு தவறான விளக்கங்கள் மூலம் தொழுகையை விட்டவன் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிய கருத்தில் சொல்லப்பட்டு குப்ர் கிடையாது. மாறாக குப்ர் என்ற பதத்தின் மூலம் அல்லாஹ்வின் அருட்கொடைகளை மறுத்தவன் என்ற கருத்திலேதான் சொல்லப்பட்டிருக்கிறது. என்ற கருத்து பிழையானதும், ஆதாரமற்றதுமாகும்.
நாம் மேற் கூறியது போன்று அவன் (காபிர்) இஸ்லாத்தை விட்டும் வெளியேரியவன் என்பது தெளிவாகி விட்டால்,

1 – அவனுக்கு திருமணம் முடித்துக் கொடுப்பது கூடாது. ஏனெனில் (திருமணம் என்பது ஒரு ஒப்பந்தமாகும்). தொழுகை இல்லாத ஒருவனுக்கு திருமண ஒப்பந்தம் செய்வது செல்லுபடி அற்றதாகும். அப்படியாயின் அவனுக்கு செல்லுபடியற்ற ஒப்பந்தத்தின் மூலம் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட மனைவி ஆகுமானவளாக இருக்க மாட்டாள். திருமறையில் அல்லாஹ் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த பெண்களைப் பற்றி கூறும் போது

(நீங்கள் அப்பெண்களை முஃமீன்கள் என்று அறிந்து கொண்டால் அப்பெண்களை மீண்டும் மக்காவிலுள்ள தமது காபிரான (இஸ்லாத்தை ஏற்காத) கணவன்மார்களிடம் திருப்பி அனுப்ப வேண்டாம். (ஏனெனில்) முஃமினான இப்பெண்கள் காபிரான அந்த ஆண்களுக்கு ஹலாலாக மாட்டார்கள்.
(அல் மும்தஹினா 10)

2 – திருமணம் முடிந்ததற்குப் பிறகு அவன் தொழுகையை விட்டால் திருமண ஒப்பந்தம் முறிந்து விடுகிறது.

மேற் குறிப்பிட்ட திருமறை வசனத்தைக் கவனிக்கும் போது, அவனுக்கு அப் பெண் ஹலாலாக மாட்டாள். மார்க்க அறிஞர்களின் விளக்கத்திற்கு ஏற்ப உறவு கொள்வதற்கு முன் அல்லது உறவு கொண்டதற்கு பின்னும் சரியே.

3 – தொழுகையை விட்டவன் ஏதாவது ஒரு பிராணியை அல்லது பறவையை அறுத்தால் அவன் மூலம் அறுக்கப்பட்டவைகள் சாப்பிடப்படமாட்டாது. ஏனெனில் அவன் மூலம் அறுக்கப்பட்ட அனைத்துமே ஹராமாகும். மாற்றமாக ஒரு யூதன், அல்லது கிறிஸ்தவன் அறுத்த பிராணியை ஒரு முஸ்லிம் சாப்பிடுவதில் தப்பில்லை. அது ஆகுமானதாகும். ஆனால் (அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்). தொழுகையை விட்டவனுடைய நிலை யூத கிறிஸ்தவனுடைய நிலையை விடவும் மிக மோசமானதாகும்.

4 – தொழுகையை விட்டவன் மக்காவிற்குள் அல்லது மக்காவினுடைய எல்லைக்குள் நுழைவது கூடாது. அல்லாஹ் திருமறையில் குறிப்பிடும் போது:

ஈமான் கொண்ட விசுவாசிகளே! நிச்சயமாக முஷ்ரிக் இணை வைத்து வணங்கக்கூடியவர்கள் அசுத்தமானவர்களே! இவ்வாண்டுக்குப் பிறகு அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமுக்கு நெருங்கவும் வேண்டாம்.(அத்தவ்பா 28).

5 – தொழாதவனுக்கு அவனுடைய உறவினர்கள் யாராவது மரணித்தால் இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தில் எவ்விதப் பங்கும் கிடையாது. மகன் தொழுகையை விட்ட நிலையில், இறந்தவர் தந்தையாக இருந்தாலும் சரியே! (தந்தை தொழக்கூடியவர், மகன் தொழுகையை நிறைவேற்றாமல் விட்டவர்) மரணித்தவருக்கு தொலைவில் சொந்தமான சிறிய தந்தையுடைய தொழுகையை நிறைவேற்றும் மகன் ஒருவர் இருக்கிறார். இந்நிலையில் யார் வாரிசுரிமைக்கு உரித்தானவர்? மகன் தவிர்ந்த அவருடைய சிரிய தந்தையின் மகனே வாரிசுரிமைக்கு உரித்தானவராவார்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உசாமா (ரழி) அறிவிக்கக் கூடிய ஹதீஸிலே (காபிர் முஸ்லிமுடைய சொத்திலோ... முஸ்லிம் காபிருடைய சொத்திலோ வாரிசுரிமை பெறமாட்டார்)

ஆதாரம் புஹாரி முஸ்லிம்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (வாரிசுரிமைக்குரிய சொத்துகளை அதற்கு உரியவர்களிடத்திலே சேர்த்துவிடுங்கள்).

6 – தொழுகையை விட்டவன் பிர்அவ்ன், ஹாமான், காரூன், உபை இப்னு கலப் போன்ற, காபிர்களின் தலைவர்களோடு எழுப்பப்படுவான். சுவர்க்கத்தில் நுழையவும் மாட்டான், அவனுடைய உறவினர்கள் அவனுக்காக வேண்டி ரஹ்மத்தைக் கொண்டோ, பாவமன்னிப்பு வேண்டியோ பிராத்தனை செய்வதும் கூடாது, ஏனெனில் அவன் காபிராவான். பிரார்த்தனைக்கும் உரித்தாக மாட்டான். குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: (நபிக்கோ இன்னும் யாரெல்லாம் ஈமான் கொண்டிருக்கிறார்களோ அவர்களும், முஷ்ரிகீன் (இணை வைப்பாளர்களுக்காக பிழைபொறுக்கும் படி இறைவனிடத்தில் பாவமன்னிப்பு கோரும் உரிமை கிடையாது. நிச்சயமாக அவர்கள் நரகவாதிகள் என்று தெளிவாக தெரிந்த பின்னர் அவர்கள் நமக்கு நெருங்கிய உறவினர்களாக இருப்பினும் சரியே) (அத் தவ்பா 113)

2 – யார் திருமணம் முடித்த பின்னர் தொழுகையை விட்டவராக இருக்கிறாரோ அவருடைய திருமணம் ரத்து செய்யப்படும். அவருக்கு தம் மனைவியோடு சேர்ந்து வாழ்வது கூடாது அவர் தம் மனைவியோடு உறவு கொண்டிருந்தாலும் அல்லது உறவு கொள்ளாதிருந்தாலும் சரியே.

தொழுகையை நிறைவேற்றாமல் இருப்பவருடைய விடயம் மிகவும் பாரதூரமானதும் பயங்கரமானதுமாகும். மனக் கவலைக்குரிய விடயம் என்னவெனில், பலர் இவ்விடயத்தின் பாரதூரம் அறியாமல் பராமுகமாக இருப்பதாகும். தொழாதவனை தமது வீடுகளில் அனுசரித்து நடக்கிறார்கள். இது அறவே கூடாத செயலாகும். இச்சட்டங்கள் ஆண், பெண் வித்தியாசமின்றி இருதரப்பினருக்கும் உரியதாகும்.

தொழாமல் இருப்பவர்களே! அல்லது அது பற்றி பொருட்படுத்தாமல் இருப்பவர்களே! இன்னும் எஞ்சியிருக்கக்கூடிய உமது வாழ்க்கையிலாவது அதை உணர்ந்து நல்லமல்களில் ஈடுபடுவீராக. இன்னும் நீர் வாழ்வது எவ்வளவு காலமென்பதை அறிய மாட்டீர். இன்னும் எஞ்சியிருப்பது ஒரு மாதமா? அல்லது ஒரு வாரமா? சில நாட்களா? என்பதை அல்லாஹ்வைத் தவிர வேறு யார் அறிவார்? எனவே! நீர் அல்லாஹ்வின் இந்த அருள் வாக்கை ஞாபகத்தில் வைத்துக் கொள். (நிச்சயமாக யார் அவனது இறைவனிடத்தில் குற்றம் இழைத்தவராக வருகின்றாரோ நிச்சயமாக அவர் தங்குமிடம் நரகமே. அவர் அதில் மரணிக்கவும் மாட்டார். உயிர் வாழவும் மாட்டார்).
இன்னும் யார் வரம்பு மீறி உலக வாழ்கையை விரும்பி ஏற்றுக் கொண்டாரோ அவர் ஒதுங்குமிடம் நரகமே. (அந்நாசிஆத் 37 – 39)
அல்லாஹ் உனக்கு அனைத்து நலவிலும், வெற்றியிலும் தவ்ஃபீக் செய்தருள்வானாக. உனது வாழ்நாட்களை இனிமையானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் இஸ்லாமிய மார்க்கத்தின் நிலழில், அறிவால் அமலால், அழைப்பால், ஈடேற்றமானதாக அல்லாஹ் ஆக்கி அருள்வானாக! அல்லாஹ் மிகவும் அறிந்தவன். அவன் தூதர் நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் அருள் புரிவானாக!

**மதிப்பிற்குரிய பேரறிஞர் ஸாலிஹ் பின் முஹம்மத் அல் உதைமீன்**
**- அல்லாஹ் அவருக்கு அருள்பரியட்டுமாக-**
**தமிழில்: மவ்லவி அஷ்ரப் ஸஹ்வி**
**மீள் பார்வை மவ்லவி இம்ரான் கபூர்**